பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 08 2024 12 40
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தமிழகம் வருவதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

2. விண்வெளியில் இந்தியாவின் விண்வெளி நிலையம் 2035ஆம் ஆண்டுக்குள் அமையும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் குரங்கம்மை நோய் பாதிப்பு இல்லை என்று மாநில சுகாதார அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. இஸ்ரேல் - ஹமாஸ் போர்நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ஆண்டனி பிளிங்கன் இன்று பங்கேற்கிறார்.

5. ஆஸ்திரேலயா ‘ஏ’ மகளிர் அணிக்கு எதிரான 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 244 ரன் என்ற வெற்றி இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தமிழகம் வருவதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் கடலோர காவல்படையின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை சென்னையில் இன்று திறந்து வைக்கிறார்.

கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் அவசர கால சூழலில் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள உதவிடும் வகையிலும் இந்த மையம் செயல்படும்.

கடற்கரைப் பகுதிகளில் எண்ணெய் மற்றும் ரசாயனப் பொருட்கள் கலப்பதால் ஏற்படும் மாசிலிருந்து மீட்கும் நடவடிக்கைகளில் கடல்சார் மாசு மீட்பு மையம் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா அவரது உருவம் பொறித்த நினைவு நாணயத்தையும் திரு. ராஜ்நாத் சிங் வெளியிடுகிறார்.

புதுச்சேரி கடலோர காவல்படை விமானதள வளாகத்தையும் அமைச்சர் இன்று திறந்து வைக்கிறார்.

<<<<>>>>

தாய்லாந்து பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள **Paetongtarn Shinawatara**-வுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா – தாய்லாந்து இடையிலான இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக அவரோடு இணைந்து செயலாற்ற தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

கலாச்சாரம் மற்றும் நாகரிக அடிப்படையில் இரு நாடுகளும் நெடுங்காலமாக இணைப்பைக் கொண்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

விண்வெளியில் இந்தியாவின் விண்வெளி நிலையம் 2035ஆம் ஆண்டுக்குள் அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தொலைநோக்குப் பார்வையுடன் மத்திய பட்ஜெட்டில் விண்வெளித் துறைக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு விண்வெளித்துறையில் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டதாகவும், அடுத்த 10 ஆண்டுகளில் இது பத்து மடங்காக அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ககன்யான் திட்டம் கோவிட் காரணமாக தாமதம் ஆனதாகாகவும், அத்திட்டம் தொடர்பான சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

2025-ல் இந்தியாவின் வாயிமித்ரா எனும் ரோபோ விண்வெளிக்கு அனுப்பப்படும் என்றும், ஒரு விண்வெளி வீரரின் பணிகளை அது மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விண்வெளித்துறை தொடர்பாக செயல்பட்டு வரும் புத்தாக்க நிறுவனங்களின் எண்ணிக்கை 300-ஐ எட்டியிருப்பதாகவும், கூறினார்.

இஸ்ரோவின் செயல்பாடுகளில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், இஸ்ரோவுக்கு சொந்தமான இடத்தில் தனியார் ஏவுதளம் அமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டுள்ளார்

<<<<>>>>

கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி. கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 5 அல்லது அதற்கு மேற்பட்டோர் சட்டவிரோதமான முறையில் கூடுவதற்கு தடை விதிக்கும் வகையில் பாரதிய நாக்ரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் 163வது அங்கு அமல்படுத்தப்படுவதாக மேற்குவங்க காவல்துறை தெரிவித்துள்ளது.

கடந்த 14ஆம் தேதி இரவு மாணவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அங்கு விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்பட்டதையடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கொல்கத்தா பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சஞ்சய் ராயிடம் உளவியல் ரீதியிலான விசாரணை மேற்கொள்ளப்படும் என்று சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

இம்மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முன்னாள் முதல்வரிடம் சி.பி.ஐ. நேற்று விசாரணை நடத்தியது. இன்றும் அவர் விசாரிக்கப்பட்டு வருவதாக அது தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் அம்மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் சந்தீப் கோஷ் பெயர் இடம்பெற்ற நிலையில் மேற்குவங்க எலும்பியல் மருத்துவர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருப்பதியில் உள்ள திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாக கட்டிடத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

கட்டிடத்தின் பொறியியல் பிரிவில் ஏற்பட்ட தீயை அதன் ஊழியர்கள் அனைத்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக தலைமைப் பாதுகாப்பு அதிகாரி திரு. ஸ்ரீதர் தெரிவித்தார்.

<<<<>>>>

இஸ்ரேல் – ஹமாஸ் போர்நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. ஆண்டனி பிளிங்கன் இன்று பங்கேற்கிறார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இஸ்ரேல் – ஹமாஸ் அமைப்பினர் இடையே மோதல் ஏற்பட்ட நிலையில் 9வது முறையாக அவர் டெல்அவிவ் நகருக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தின்போது இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, பாதுகாப்பு அமைச்சர் **Yoav Gallant**-ஐயும் அவர் சந்திக்க இருப்பதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கெய்ரோவில் நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த்தையை திரு. ஆண்டனி பிளிங்கன் மேற்பார்வையிட உள்ளார்.

<<<<>>>>

தேர்வு முடிவுகள் தொடர்பாக தவறான விளம்பரத்தை வெளியிட்டதற்காக ஸ்ரீராம் ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனத்திற்கு 3 லட்சம் ரூபாய் அபராதத்தை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் விதித்துள்ளது.

இப்பயிற்சி நிறுவனத்தின் மூலம் 2022ஆம் ஆண்டில் 200 பேர் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தவறாக விளம்பரப்படுத்தியதாகவும், அம்மையத்தை சேர்ந்த 171 பேர் மட்டுமே இதில் தேர்ச்சியடைந்திருப்பதாகவும் மத்திய நுகர்வோர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் பெரும்பாலோனோர் அப்பயிற்சி நிறுவனத்தின் பங்களிப்பு இல்லாமல் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் அது கூறியுள்ளது.

இதன் மூலம் நுகார்வோர் பாதுகாப்பு சட்டம்-2019 மீறப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற விளம்பரங்கள் போட்டித்தேர்வில் பங்கேற்கும் மாணவர்களை தவறாக வழிநடத்துவதாகவும், அதனால் அவை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

குடியுரிமை திருத்தச் சட்டத்தின்கீழ் 188 பேருக்கு சான்றிதழ்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று வழங்குகிறார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில், ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

மேலும் பிரஹ்லாத் நகரில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் பங்கேற்க உள்ள திரு. அமித் ஷா, சபர்மதியில் பிஜேபி கட்சி நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் குரங்கம்மை நோய் பாதிப்பு இல்லை என்று மாநில சுகாதார அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற நிகழச்சியில் பங்கேற்ற அவர், செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

கன்னியாகுமரியில் கடந்த 10 நாட்களாக கடல் கொந்தளிப்பு காணப்பட்டதால் மக்கள் கடலில் இறங்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

நிலைமை மீண்டும் இயல்புக்கு திரும்பியதை அடுத்து தடை விலக்கிக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், வார விடுமுறையான இன்று அதிக அளவில் சுற்றுலாவாசிகள் வருகை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆஸ்திரேலயா 'ஏ' மகளிர் அணிக்கு எதிரான 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 244 ரன் என்ற வெற்றி இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் **Mackay** நகரில் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய 'ஏ' அணி பந்துவீச தீர்மாணித்தது.

இந்திய 'ஏ' அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 243 ரன் எடுத்தது.

இந்திய ஏ அணி தரப்பில் ராகவி பிஸ்த் அதிகபட்சமாக 53 ரன் எடுத்தார்.

244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தற்போது பேட்செய்து வரும் ஆஸ்திரேலிய ஏ அணி சற்றுமுன் வரை 2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 14 ரன் எடுத்துள்ளது.

--------------

உலக துடுப்புப் படகு சாம்பியன் போட்டிகள் கனடாவின் **Ontario** நகரில் இன்று தொடங்குகிறது.

19 வயதுக்குட்பட்டோர், 23 வயதுக்குட்பட்டோர் மற்றும் சீனியர் பிரிவுகளில் இப்போட்டி நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**